தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### முட்டை விலையைக் குறைப்பதில்லை: பண்ணையாளர்கள் முடிவு

முட்டை விலையை ரூ.3.46-க்கு கீழ் குறைப்பதில்லை என பண்ணையாளர்கள், வியாபாரிகள் முடிவு செய்துள்ளனர். கோழிப் பண்ணையாளர்கள், வியாபாரிகள் பங்கேற்ற சிறப்புக் கூட்டம், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு (என்இசிசி) நாமக்கல் மண்டலத் தலைவர் பி.டி.செல்வராஜ் தலைமையில் நாமக்கல்லில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. முட்டை விலையை மேலும் குறைக்காமல் ரூ.3.46 என்ற விலையில் தொடர்வது, கேரளத்தில் பறவைக் காய்ச்சல் பீதி முற்றிலும் இல்லாததாலும், சபரிமலைக்கு மாலை அணிந்து சென்று வரும் காலம் முடிவடைய இருப்பதாலும், கிறிஸ்துமஸ் பண்டிகை வருவதாலும், வட மாநிலங்களில் குளிர் அதிகரித்து வருவதாலும், முட்டை தேவை அதிகரித்து விலை உயர வாய்ப்புள்ளது. என்இசிசி அறிவித்த விலையைக் காட்டிலும் திங்கள்கிழமை 10 பைசா மைனஸ் விலையிலும், செவ்வாய்க்கிழமை 5 பைசா மைனஸ் விலையிலும் முட்டையை விற்கலாம். புதன்கிழமை முதல் மைனஸ் விலை இல்லை. அதன்பிறகு பண்ணையாளர்கள் மைனஸ் விலைக்கு முட்டையை விற்பனை செய்யக் கூடாது எனக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

### பட்டுப்புழு வளர்ப்பில் பயிர் பாதுகாப்பு குறித்த பயிற்சி

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியம் நற்பதம் கிராமத்தில் பட்டுப்புழு வளர்ப்பில் பயிர் பாதுகாப்பு குறித்து 2 நாள் பயிற்சி முகாம் நடைபெற்றது. மத்திய பட்டு வாரியம், ஆராய்ச்சி விரிவாக்க மையம், சமயநல்லூர் மற்றும் உதவி இயக்குநர் பட்டுவளர்ச்சித்துறை மூலம் 2 நாள்கள் இப்பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. முகாமில் பட்டுத்தொழிலில்

ஈடுபடும் விவசாயிகளுக்கு மல்பெரி நாற்று மானியம், சிறு விவசாயிகளுக்கு முழு மானியத்துடன் கூடிய சொட்டுநீர் பாசனவசதி, தனி புழு வளர்ப்பு மனை அமைக்க மானியம், புழு வளர்ப்பதற்கான நவீன தளவாடங்கள் வாங்க மானியம் ஆகியவை பட்டுவளர்ச்சித்துறை மூலமாக வழங்குவது குறித்தும், உயர்ரக மல்பரி நாற் றுகள் மற்றும் பட்டுத்தொழில் சம்பந்தமான பயிற்சிகள் அளிக்கப்பட்டன. முகாமில் ஆராய்ச்சி விரிவாக்க மைய சமயநல்லூர் விஞ்ஞானிகள் டேனியல், சிவ சுப்பிரமணியன் ஆகியோர் கலந்துகொண்டு பயிற்சியளித்தனர். திண்டுக்கல் பட்டுவளர்ச் சித்துறை உதவி இயக்குநர் சச்சிதானந்தம் விவசாயிகளுக்கு பட்டுப்புழு நோய் தடுப்பு மருந்துகளை வழங்கினார்.

முடிவில் உதவி ஆய்வாளர் செல்வராஜ் நன்றி கூறினார்.

## <u>வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்ட கலந்தாய்வுக் கூட்டம்</u>

வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டம் சார்பாக, அரசு நலத் திட்டங்கள் குறித்த கலந்தாய்வுக் கூட்டம் ஆரணியில் திங்கள்கிழமை நடைபெற்றது. வேளாண்மை உதவி இயக்குநர் வே.சத்தியமூர்த்தி தலைமை தாங்கி, வேளாண்மைத் துறையில் அட்மா திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள் குறித்து விரிவாகப் பேசினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சதீஷ்குமார் வரவேற்றார். இக்கூட்டத்தில் ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் கரும்பு அலுவலர் மு.வேலாயுதம் கலந்துகொண்டு, சர்க்கரை ஆலை மூலம் செயல்படுத்தப் படும் திட்டம், நீடித்த நவீன கரும்பு சாகுபடி திட்டம், மானியத்தில் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்தல் உள்ளிட்டவை குறித்துப் பேசினார். வேளாண்மை அலுவலர் பவித்ராதேவி, தோட்டக்கலைத் துறை சார்பில் அன்பு, அட்மா திட்டப் பிரதிநிதிகள் தர்மலிங்கம், கார்த்தி, பவித்ரகுமார், ஜோதியம்மாள், காந்தம்மாள், செப்ந்தரராஜன் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்ட விவசாயிகள்

கலந்துகொண்டனர்.

**<u>கொப்பரைக்கு ஆதரவு விலையை ரூ.140 ஆக நிர்ணயிக்க வேண்டும்</u>**

கொப்பரைத் தேங்காய்க்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை கிலோவுக்கு ரூ.140 ஆக நிர்ணயிக்க வேண்டும் என்று மக்களவையில் பொள்ளாச்சி தொகுதி அதிமுக உறுப்பினர் சி.மகேந்திரன் கோரிக்கை விடுத்தார். இது தொடர்பாக மக்களவையில் திங்கள்கிழமை அவர் முன்வைத்த கோரிக்கை: எனது பொள்ளாச்சி மக்களவைத் தொகுதியில் ஏறக்குறைய 92 ஆயிரம் ஹெக்டேரில் தென்னை சாகுபடி நடைபெற்று வருகிறது. தென்-மேற்கு, வட-கிழக்கு பருவமழை தவறியதால், தென்னை விவசாயிகள் நெருக்கடியில் உள்ளனர். மேலும், கொப்பரை உற்பத்தியில் மிகப்பெரிய இழப்பை எதிர்கொண்டு வருகின்றனர். இதனால், கொப்பரை உற்பத்தி குறைந்து கொண்டிருக்கிறது. பெரும் சிரமத்துக்கிடையே 2 லட்சத்து 2 ஆயிரம் மெட்ரிக் டன் கொப்பரை உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. தென்னை விவசாயிகள் நிதி நெருக்கடியில் இருந்து விடுபடும் வகையில், தேசிய வேளாண்மை கூட்டுறவுச் சந்தை நிறுவனம் (நாஃபெட்) நிர்ணயித்துள்ள கொப்பரைத் தேங்காய்க்கான ஆதரவு விலையை கிலோ ரூ.140 ஆக உயர்த்த வேண்டும் என்று தமிழக முன்னாள் முதல்வர் ஏற்கெனவே கோரிக்கை வைத்திருந்தார். இதற்கு நாஃபெட் நிறுவனம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மகேந்திரன் வலியுறுத்தினார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>தென்னையை பாதுகாக்க புதிய தொழில் நுட்பம்</u>**

காந்திகிராமம் : வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களை பாதுகாக்க காந்திகிராம பல்கலை வேளாண் அறிவியல் மையம் புதிய

தொழில்நுட்பத்தை செயல்படுத்தியுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் 24,798 ஏக்கரில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சில ஆண்டு களாக நிலவிய வறட்சியால் தென்னை மரங்கள் பாதிக்கப் பட்டுள்ளன. ஓரளவு பருவமழை பெய்தபோதிலும் மரங்களில் குரும்பை கொட்டுவது, ஒல்லிக்காய்கள் போன்ற பிரச்னைகள் ஏற்பட்டுள்ளன. இவற்றில் இருந்து தென்னைகளை பாதுகாக்க காந்திகிராம பல்கலை வேளாண் அறிவியல் மையம் புதிய தொழில்நுட்பத்தை செயல்படுத்தியுள்ளது. இதற்காக அங்குள்ள பண்ணையில் செயல்விளக்க திடல் அமைக்கப்பட்டுள்ளது. வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுனர் செந்தில்குமார் கூறியதாவது: "தென்னை மரங்களுக்கு சொட்டுநீர் பாசனம் மூலம் தினமும் 40 முதல் 60 லிட்டர் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். மரங்கள் திடகாத்திரமாக இருக்க பசுந்தாள் உரங்கள் அதிகம் இட வேண்டும். மரத்தில் இருந்து 2 முதல் 3 அடிவரை சுத்தம் செய்து வட்டப்பாத்திகள் அமைக்க வேண்டும். பசுந்தாள் உரப்பயிர்களான சனப்பு, தக்கைப்பூண்டு, தட்டைப்பயறு போன்றவற்றில் ஏதாவது ஒன்றை விதைத்து பூக்கும் பருவத்தில் மண்ணுடன் மடக்கி உழவு செய்ய வேண்டும். இதன்மூலம் மரத்திற்கு 10 முதல் 15 கிலோ பசுந்தாள் உரம் கிடைக்கும். இதனை ஆண்டிற்கு நான்கு முறை செய்வதன் மூலம் மண்ணின் அங்ககச்சத்து அதிகரித்து நீர்ப்பிடிப்பு திறன் அதிகரிக்கிறது. தென்னை பயிரிட்டுள்ள பெருவாரியான பகுதிகள் மணல்சார்ந்த நிலமாக உள்ளதால் இவற்றில் பயிருக்கு தேவையான ஊட்டச்சத்து மற்றும் அங்கக பொருட்களின் அளவு குறைந்து காணப்படும். மண்ணிற்கேற்ற உரங்கள் இடுவதன் மூலம் தென்னையில் தொடர்ச்சியான நல்ல விளைச்சல் பெறலாம்,' என்றார்.

**<u>மானிய விலையில் சிப்சம், உயிர் உரம்</u>**

காஞ்சிபுரம்: நிலக்கடலை பயிர் செய்யும் விவசாயிகளுக்கு, 50 சதவீதம் மானிய விலையில் சிப்சம், உயிர் உரங்களை, வேளாண்மை துறை

வழங்குகிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தில், 70 ஆயிரம் ஏக்கரில், நிலக்கடலை பயிர் செய்யப்படுகிறது. விவசாயிகள், ஆண்டுதோறும் கார்த்திகை மாதத்தில் சாகுபடி வேலைகளை துவங்குவர். இதனால், தற்போது நிலக்கடலை பயிர் செய்யும் விவசாயிகளுக்கு தேவையான உயிர் உரங்கள், சிப்சம் ஆகியவற்றை, 50 சதவீத மானிய விலையில் பெற்று பயனடையலாம் என, வேளாண்மை துறை அறிவித்துள்ளது. வேளாண்மை விரிவாக்கம் மையங்கள் உட்பட, 29 இடங்களில் உரம் விற்பனை செய்யப்படுகிறது. இதுகுறித்து, வேளாண்மை துறை இணை இயக்குனர் சீதாராமன் கூறுகையில், "விவசாயிகளுக்கு தேவையான உரங்கள், அந்தந்த வேளாண்மை விரிவாக்க மையங்களில் கிடைக்கும். வேளாண் துறையினர் ஆலோசனை படி, பயிர் செய்தால், நிலக்கடலை நல்ல மகசூல் தரும்," என்றார்.

## <u>விவசாயிகளுக்கு மானிய விலையில் விதை வழங்கல்</u>

திருக்கோவிலூர்: திருக்கோவிலூர் தோட்டக்கலை அலுவலகம் சார்பில் விவசாயிகளுக்கு காய்கறி விதைகள், பழமரக்கன்றுகள் வழங்கும் விழா நடந்தது. திருக்கோவிலூர் தோட்டக்கலை அலுவலகம் சார்பில் ஒருங்கிணைந்த பண்ணையம் கிராமமான பரடாப்பட்டு, தரிசுநில மேம்பாட்டு திட்டத்தில் கரடி உட்பட பல கிராமங்களை சேர்ந்த 13 விவசாயிகளுக்கு 60 சதவீத மானியத்தில் இடுபொருள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. உதவி வேளாண்மை அலுவலர் பாலகிருஷ்ணன் வரவேற்றார். தோட்டக்கலை உதவி இயக்குநர் முருகன் தலைமை தாங்கினார். சேர்மன் அறிவழகன் தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தில் கத்திரி, வெண்டை, கொத்தமல்லி, மிளகாய் விதைகள்.மா, மல்லிகை கன்றுகளை வழங்கினார். நிகழ்ச்சி ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் ராஜேஷ், பாஸ்கர், அரிபாலன் செய்திருந்தனர்.

## யூக்கலிப்டஸ் மரங்கள் செழித்து வளர வனப்பகுதியில் உழும் பணி தீவிரம்

தியாகதுருகம்: தியாகதுருகம் வனப்பகுதியில் வளர்க்கப்படும் யூக்கலிப்டஸ் மரங்கள் செழித்து வளர டிராக்டர் மூலம் மண்ணை உழவு செய்யும் பணி நடந்து வருகிறது. தியாகதுருகம், ரிஷிவந்தியம் வனப்பகுதியில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பில் யூக்கலிப்டஸ் மரங்கள் வியாபார நோக்கில் வளர்க்கப்படுகிறது. இம்மரக்கன்றுகளை நட்டு பராமரிக்கும் பணியை வனத்துறையினர் செய்து வருகின்றனர். லட்சக்கணக்கான மரங்கள் வளர்க்கப்பட்டு தகுந்த பருவம் அடைந்ததும் சுழற்சி முறையில் அறுவடை செய்து பேப்பர் உற்பத்திக்கு அனுப்பப் படுகிறது. இதன் மூலம் அரசுக்கு பல கோடி ரூபாய் வருவாய் கிடைக் கிறது. இப்பகுதியில் பரவலாக மழை பெய்வதால் இத்தருணத்தில் கிடைக்கும் நீர் வனப்பகுதியில் தேங்கவும், மண்ணில் விழுந்த இலைகள் மக்கி மரங்களுக்கு உரமாகும் வகையில் உழும் பணி நடக்கிறது. தகுந்த ஈரப்பதம் உள்ளதால் மரங்களுக்கு இடையே டிராக்டர் மூலம் மண்ணை உழும் பணியில் வனத் துறையினர் ஈடுபட்டுள்ளனர். இதனால் மரங்கள் நன்கு செழித்து ஊட்டமாக வளர்ந்து கூடுதல் பலனை கொடுக்கிறது.

## மக்காசோளம் வரத்து அதிகரிப்பு

சின்னசேலம்: சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு நேற்று மக்காசோளம் வரத்து அதிகரித்தது.சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு 650 மக்காசோளம் மூட்டைகள் வந்தன. அதிகபட்சம் ரூ.1,138க்கும், குறைந்தபட்சம் ரூ.900க்கும் விலை போனது. கடந்த வாரம் விவசாயிகள் கொண்டு வந்த 2300 மக்காசோளம் மூட்டைகள் ரூ.24 லட்சத்து 45 ஆயிரத்து 155 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டது.

## விவசாயிகள் குறை கேட்பு

விழுப்புரம்: விழுப்புரம் மாவட்ட விவசாயிகள் குறை தீர்ப்பு நாள் கூட்டம் வரும் 19ம் தேதி காலை விழுப்புரம் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில்

நடக்கிறது. இதில் மாவட்டத்திலுள்ள விவசாய சங்கப் பிரதிநிதிகள், விவசாயிகள் கோரிக்கைகளை மனுவாகக் கொடுத்து பயன் பெறலாம். இவ்வாறு கலெக்டர் அலுவலக செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகள் புது யுக்தி**

கச்சிராயபாளையம்: கண் திருஷ்டியிலிருந்து பயிர்களை காக்க விவசாயிகள் புதிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். கள்ளக்குறிச்சி பகுதியில் விவசாய பணிகள் பெருமளவில் நடக்கிறது. விவசாய நிலங்களில் செழித்து வளரும் பயிர்களை கண் திருஷ்டியிலிருந்து பாதுகாக்க நெல் வயலின் நடுவில் பொம்மைகள் செய்து வைத்தும், பழைய செருப்புகளை கட்டி தொங்க விட்டனர். தற்போது விவசாயிகள் புது முயற்சியாக பல நிறங்களில் துணிகளை கட்டி பார்ப்பவர்களின் கண் திருஷ்டியிலிருந்து பயிர்களை காப்பாற்ற புது முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

**உளுந்து விளைச்சல் அமோகம்**

கண்டாச்சிபுரம்: கெடார் பகுதிகளில் அமோக உளுந்து விளைச்சலால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். விழுப்புரம் அடுத்த கெடார், வீரமூர், சூரப்பட்டு, சிறுவாலை, கக்கனூர், அரியலூரார் பகுதிகளில் உளுந்து விளைச்சல் அமோகமாக உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கடந்த இரண்டு ஆண்டுகளாக இப்பகுதிகளில் போதிய மழை இல்லாமல் இருந்தாலும் ஊடுபயிராகவும், தனிப் பயிராகவும் பயிரிட்ட சிறுதானிய பயிர் வகைகள் நல்ல விளைச்சலைக் கண்டுள்ளது. உளுந்து பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தகுந்த விலையில் அரசு கொள் முதல் செய்தால் மற்ற பயிர்களில் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்ய உதவும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

**மரவள்ளி கிழங்கு சாகுபடி; விவசாயிகளுக்கு அறிவுரை**

ராசிபுரம் : ராசிபுரம் மேக்னம் பயிற்சி மையம் சார்பில், மரவள்ளி விவசாயிகளுக்கான ஆலோசனை கூட்டம், பயிற்சி மையத்தில் நடந்தது.

மரவள்ளி கிழங்கு உற்பத்தி விவசாயிகள் சங்கத் தலைவர் வீரமுத்து தலைமை வகித்தார். மரவள்ளி கிழங்கு உற்பத்தியாளர்கள் ஜவ்வரிசி மில், கிழங்கு புரோக்கர்களிடம் இருந்து முன் பணமாக, 36 சதவீதம் வட்டிக்கு வாங்குவதை தவிர்க்க வேண்டும்.கிராமங்கள் தோறும் உழவர் நிலையம் அமைக்க வேண்டும். பால் உற்பத்தியாளர்கள், தனியார் பால் சங்கங்களை அணுகாமல், கூட்டுறவு சங்கத்தின் சேவையை பயன்படுத்த வேண்டும். மரவள்ளிக் கிழங்கின் உற்பத்தியை அதிகரிக்க, அரசு வேளாண்மை வல்லுநர்களின் சேவையை பயன்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.செயலாளர் முருகானந்தன், மேக்னம் நிறுவனர் சக்திவேல், உழவர் மன்ற அமைப்பாளர் சுப்ரமணி, ராசிபுரம் தாலுக்காவுக்கு உட்பட்ட நாமகிரிப்பேட்டை, மெட்டாலா, முள்ளுக்குறிச்சி, மங்களபுரம், நாரைகிணறு உள்ளிட்ட பகுதி மரவள்ளி கிழங்கு விவசாயிகள் பங்கேற்றனர்.

## ரூ.1 கோடிக்கு பருத்தி வர்த்தகம்

ராசிபுரம் : ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தில், நேற்று, ஒரு கோடி ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடந்தது. ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின் (ஆர்.சி.எம்.எஸ்.) கவுண்டம்பாளையம் குடோனில் பருத்தி ஏலம், நேற்று, நடந்தது.சீராப்பள்ளி, சிங்காளந்தபுரம், கதிராநல்லூர், பட்டணம் வடுகம், நாமகிரிப்பேட்டை, கரடியானூர், புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள், 4,709 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். டி.சி.எச்., ரகம் அதிக பட்சமாக, 4,950, குறைந்த பட்சமாக, 4,670, ஆர்.சி.எச்., ரகம் அதிகபட்சமாக, 4,650, குறைந்த பட்சமாக, 4,001 ரூபாய்க்கு ஏலம் போனது.ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு, அன்னூர், அவிநாசி, கொங்கணாபுரம் ஆகிய பகுதியைச் சேர்ந்த, 20க்கும் மேற்பட்ட

வியாபாரிகள் பருத்தியை, ஒரு கோடி ரூபாய்க்கு ஏலம் எடுத்து சென்றனர்.

## மண்புழு உரமிட்ட நிலங்கள் வேளாண் அதிகாரிகள் ஆய்வு

நிலக்கோட்டை : நிலக்கோட்டை அருகேயுள்ள எத்திலோடு, பள்ளபட்டி, விளாம்பட்டி, பிள்ளையார்நத்தம் பகுதிகளில் வைகை அணை தண்ணீர் மூலம் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. குதிரைவல்லி, இருங்கு சோளம், வெள்ளைசோளம் பயிர்களை விவசாயிகள் தங்கள் நிலங்களில் பயிர்செய்து வருகின்றனர். சில வாரங்களுக்கு முன்பு இப்பகுதி விவசாயி களுக்கு வேளாண் துறை சார்பில் மண்புழு உரமிடுவது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.இதில் கலந்து கொண்ட விவசாயிகள் மண்புழு உரங்களை வாங்கி தங்களது நிலங்களில் பயன்படுத்தினர். விளைந்த பயிர்களை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சம்பத்குமார், வேளாண்மை உதவி இயக்குனர் சுப்பையா, வேளாண்மை அலுவலர் சங்கரபாண்டியன் ஆய்வு செய்தனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## மஞ்சள் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்

சங்கராபுரம் : சங்கராபுரம் தாலுகா அதிக கிராமங்களை கொண்ட பகுதி, இங்கு பெரும்பாலானோர் விவசாயிகள். பருவமழைபொய்த்து போனது, நிலத் தடி நீர்மட்டம் குறைவால் விவசாயிகள் வழக்கமாக சாகுபடி செய்யும் பயிர்களை தவிர்த்து, குறைந்த நீரில், அதிக விளைச்சல் தரக்கூடிய மஞ்சள் பயிர் சாகுபடியில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். மஞ்சளில் விரளி மஞ்சள், நாட்டு மஞ்சள், வீரியரக மஞ்சள் ஆகிய ரகங்கள் பயிரிடப்படுகிறது. இதில் சங்கராபுரம் பகுதியில் உள்ள மூலக்காடு, பாச்சேரி, மோட்டாம்பட்டி, பாலப்பட்டு, கள்ளிப்பட்டு,

அரசம்பட்டு, பல்வேறு கிராமங்களில் விரளி மஞ்சள், நாட்டு மஞ்சள் அதிக அளவில் பயிரிடப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு 600 கிலோ விதை மஞ்சள் போதுமானது. வாரம் ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினால் போதும். பராமரிப்பு செலவு மிக,மிக குறைவு 100 கிலோ எடை கொண்ட மஞ்சள் ஒரு மூட்டையின் விலை ரூ. 7 ஆயிரம் வரை விலை போகிறது. இதனை ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டில் விற்பனை செய்கின்றனர். குறைந்த முதலீட்டில் அதிக லாபம் தருவதால் இப்பகுதி விவசாயிகள் மஞ்சள் சாகுபடியில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**<u>5 ஆயிரம் ஏக்கரில் ராகி சாகுபடி</u>**

அரூர்,: தர்மபுரி மாவட்டத்தில் சுமார் 5 ஆயிரம் ஏக்கரில் ராகி சாகு படி செய்யப்பட்டுள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் தர்மபுரி, அரூர், நல்லம்பள்ளி, பென்னாகரம், காரிமங்கலம், மொரப்பூர் பகுதியில் அதிக அளவில் ராகி பயிரிடப்பட்டுள்ளது. இதன்படி மாவட்டத்தில் சுமார் 5 ஆயிரம் ஏக்கரில் ராகி பயிர் செய்யப்பட்டுள்ளது. ஒரு ஏக்கருக்கு மானாவாரியாக இருந்தால் 4 கிலோவும், நன்செய் பயிராக இருந்தால் 2 கிலோவும் விதைப்பதற்கு தேவைப்படும். ராகி 115 நாள் பயிராகும். நாட்டில் பெருகி வரும் உடல் பருமன் தொல்லை, சர்க்கரை வியாதி உள்ளவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பால் மறந்துவிட்டிருந்த தானிய உணவுகள் மீண்டும் புத்துயிர் பெற்று வருவதை அடுத்து ராகி விலை அதிகரித்து வருகிறது. மொரப்பூர் பகுதியில் தற்போது ஜிபியு 66, 28 ரக ராகி அறுவடை பணி நடைபெற்று வருகிறது. மண்டிகளில் 100 கிலோ கொண்ட மூட்டை ரூ 2 ஆயிரத்து 400க்கும் சில்லரையில் கிலோ ரூ 28வரையும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

**<u>விவசாயிகள் குறைதீர் கூட்டம் 19ல் நடக்கிறது</u>**

தர்மபுரி, : தர்மபுரியில் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் வரும் 19ம் தேதி நடக்கிறது. இது குறித்து கலெக்டர் விவேகானந்தன் விடுத்துள்ள

அறிக்கை: தர்மபுரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட் டம், கலெக்டர் அலுவல கத்தில் மாதம் தோறும் நடத்தப்படுகிறது. இதில் விவசாயிகளின் பல்வேறு குறைகளை கேட்டறிந்து சம்பந்தப்பட்ட அதிகா ரிகளின் மூலம் நிவர்த்தி செய்யப்படுகிறது. இதன்படி வரும் 19ம் தேதி 11 மணிக்கு கலெக்டர் அலுவலகத்தில் நடக்கிறது. கூட்டத்திற்கு கலெக்டர் விவேகானந்தன் தலைமை வகிக்கிறார். இதில் தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொ ண்டு விவசாயம் தொட ர்பான குறைகளையும், கருத்துக்க ளையும் எடுத்துக்கூறி பயன் அடையலாம். இவ்வாறு கலெக்டர் விவேகானந்தன் தெரிவித்துள்ளார்.

## பாலக்கீரை பயிரிட விவசாயிகள் ஆர்வம்

ஊட்டி, : நீலகிரி மாவட்டத்தில் பாலக்கீரை பயிரிட விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். நீலகிரி மாவட்டத்தின் பிரதான தொழில் தேயிலை விவசாயம். தேயிலை விவசாயத்திற்கு அடுத்தப்படி யாக பழ வகைகள் மற்றும் மலை காய்கறிகள் அதிகளவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் விளைவிக்கப்படுகிறது. தேயிலைக்கு நிலை யான விலை கிடைக்காததால், பெரும்பான்மை யான விவசாயிகள் லாபம் தரும் காய்கறி விவசாயத்திற்கு மாறி வருகின்றனர். நீலகிரியில் உருளை கிழங்கு, கேரட், பீன்ஸ், முட்டை கோஸ், காலிபிளவர் போன்றவை மட்டுமில்லாமல் கேப்ஸிகம், பின்ச், செல்லரி, லீக்ஸ், பாலக் போன்ற சைனீஸ் காய்கறிகளும் அதிகளவு பயிரிடப்படுகிறது. நீலகிரியில் விளையும் மலை காய்கறிகள் ஊட்டி மார்க்கெட் மற்றும் வெளியூர்களுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. நீலகிரியில் விளைவிக்கப்படும் காய்கறிகள் கேரளா, கர்நாடகா மற்றும் தமிழகத்தின் முக்கிய நகரங்களான சென்னை, கோவை, ஈரோடு போன்ற இடங்களுக்கும் லாரிகள் மூலம் அனுப்பப்படுகிறது. இந்நிலையில் கோடப்பமந்து, கொல்லிமலை, எப்பநாடு உள்ளிட்ட பகுதியில் சூப் தயாரிக்க பயன்படும் பாலக்கீரைகளை விவசாயிகள் அதிகளவு பயிரிட்டுள்ளனர். பாலக்கீரை

யை ஒரு முறை பயிரிட்டால் 5 மாதத்திற்கு பயன் தருகிறது. அவ்வப் போது தளையும் கீரையை பறித்து சிறு சிறு கட்டுகளாக கட்டி வைத் தால், ஊட்டி நகரில் சை னீஸ் உணவுகள் தயாரிக்கும் ஒட்டல்கள் விலை கொடுத்து வாங்கி செல்கின்றனர். இதனால் ஓரளவிற்கு நிலையான விலை கிடைத்து வருகிறது என விவசாயிகள் தெரிவித்தனர். இதனால் பாலக்கீரையை பயிரிட விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## குளத்தில் வாத்து வளர்ப்பு அதிக லாபம் தரும் தொழில்கால்நடை பல்கலை. வழிகாட்டல்

திருச்சி,: கோழிக ளுக்கு அடுத்த படியாக லாபகரமான தொழிலாக வாத்து வளர்ப்பு விளங்கு கிறது. மீன்களை ஒருங்கிணைந்து வளர்த்தால் அதிக லாபமும் பெற வாய்ப்புள்ளது. தென்கிழக்கு ஆசியா வில் பல இடங்களில் வாத்து வளர்ப்பு நெல் உற்பத்தியுடன் இணைந்த ஒரு தொழிலாக உள்ளது. வாத்துக்களை மீன் வளர்ப்பு டன் கூடிய ஒருங்கிணைந்த பண்ணையாக வளர்க்கும் போது வாத்துகளின் எச் சம் மீன்களுக்கு உரமாக வும், உணவாகவும் பயன்படுகிறது. வாத்து மற்றும் மீன்களை ஒருங்கிணைத்து வளர்க்கும் போது இரண் டும் ஒன்றுக்கொன்று சம அளவில் பயனடைகின் றன. மீன் மற்றும் வாத்து களை இணைத்து வளர்ப்பதினால் உற்பத்தியை அதிகரித்து செலவையும் 60 சதவீதம் வரை குறைக்க வாய்ப்புள்ளது. வாத்துக ளின் எச்சம் மீன்களுக்கு உணவாகவும், மீன் குளத் தில் வளரக்கூடிய புழு, பூச்சிகள் வாத்துகளுக்கு உணவாகவும், ஒருங்கிணைந்த பண்ணையம் வாயிலாக அமையும். வாத்து மற்றும் மீன்களை ஒருங்கிணைந்து வளர்க்கும் போது மீன் வளர்க்கும் குளத்தை முறையாக அமைக்க வேண்டும். இந்த ஒருங்கிணைந்த வளர்ப்பின்போது கட்லா, ரோகு போன்ற மீன் வகை களை பயன்படுத்தலாம். வாத்து களுடன் ஒருங்கிணைத்து வளர்க்கும் போது 100 கிராம் எடை உள்ள மீன் குஞ்சுகளை ஆரம்ப காலத்தில் குளத்தில் விட்டு வளர்ப்பது நல்லது. இதில் ஒரு கிலோ எடையை அடைய ஒரு வருடம் ஆகும். அதன் பின் மீன்

அறுவடை செய்யலாம். இதில் 4 மீன் குஞ்சு வகை இனங்களில் இருந்து வருடத்திற்கு 4ஆயிரம் கிலோ மீன் அறுவடை செய்யலாம். இது குறித்து கால்நடை பல்கலைக்கழக ஆராய்ச்சி மையத் தலைவர் லூர்துரீத்தா, உதவி பேராசிரியர் ஷிபிதாமஸ் ஆகியோர் கூறுகையில், குளத்தின் நீரில் ஒருங்கிணைந்து 200 முதல் 250 வாத்துக்களை வளர்ப்பதன் மூலம் கிடைக்கும் எச்சம் ஒரு ஹெக்டேர் குளத்திற்கு தேவையான உரமாக பயன்படுகிறது. 200 முதல் 250 வாத்துகளு க்கு வீடு அமைக்க 70முதல் 100மீட்டர் பரப்பளவு போதுமானது. 3 முதல் 4 மாதம் உள்ள வாத்து குஞ்சுகளை தொடக்கத் தில் வீட்டில் வைத்து வளர்க்கலாம். இறைச்சிக் காக வளர்க்கப்படும் வாத் துகள் என்றால் 6மாதம் வரையிலும், முட்டைக்காக வளர்க்கப்படும் வாத்துகள் என்றால் ஒருவருட கால மும் வளர்க்கலாம். ஒரு வருடம் வளர்க்கும் போது வாத்துகள் 2 கிலோ உடல் எடை அடைய வாய்ப்புள்ளது. கோழித் தீவன மீதம் மீன்களுக்கும் உணவாக பயன்படுகிறது. வாத்துகள் 6 மாதத்தில் முட்டை இட ஆரம்பிக்கும். எனவே வைக்கோல் கொண்டு முட்டை இட ஒரு அமைப் பும் ஏற்படுத்த வேண்டும். அப்போது தான் முட்டை உடையாமல் கிடைக்கும். நல்ல வாத்துக்கள் ஒரு வருடத்தில் 200 முதல் 300 முட்டைகள் வரை இடும். பகல் நேரத்தில் மீன் குளத் தில் வாத்துகள் இருக்கும் போது அதன் எச்சம் மீன்களுக்கு உணவாகவும், உரமாகவும் அமையும். ஒரு வாத்தில் இருந்து ஒரு நாளைக்கு 150 கிராம் எச் சம் கிடைக்கும். அப்படி என்றால் 200 முதல் 250 வாத்து கழிவு களில் இருந்து ஒரு ஹெக்டேருக்கு 10ஆயிரம் முதல் 12 ஆயிரம் கிலோ எச்சம் குளத்திற்கு உரமாக கிடைக் கும் போது மீன்களுக்கு தேவையான உணவை தரும் ஆர்கனிஸம் உற்பத்தி ஆகும். எனவே கோழி வளர்ப்புக்கு அடுத்தபடியாக, வாத்து வளர்ப்பானது லாபகரமாக உள்ளது. நீர் தேக்கங்கள் நிறைந்த இடங்களில் மீன்களை ஒருங்கிணைந்து வளர்க்கும் போது அதிக லாபம் பெற வாய்ப்புள்ளது என தெரிவித்தனர்.

## வெங்காய வயலில் குரங்குகள் தொல்லை சூரிய வேலி மூலம் தடுப்பு நடவடிக்கை

பெரம்பலூர்,: குரங்கு, காட்டுப்பன்றிகளின் தொடர்அட்டகாசத்தால் மகசூல் பாதிப்பைப் தடுப்பதற்காக வயலைச்சுற்றி சூரியமின்வேலி அமைத்துத் தீர்வுகண்ட திருப்பெயர் இளைஞர். பெரம்பலூர் மாவட்டத்தில் திருச்சி-சென்னை தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கப் பணிகளின்போது, புளியமரங்களை புகலிடமாகக்கொண்டு வாழ்ந்துவந்த ஆயிரக்கணக்கான குரங்குகள் தற்போது அருகருகேயுள்ள கிராமங்களில் புகுந்துள்ளன. இவை பல கிராமங்களில் உள்ள கடை களில் உணவு பொருட்களை கடைக்காரருக்குத் தெரியா மல் எடுத்துச்சென்று சாப்பிட்டு அப்பகுதியை சுற்றிச்சுற்றியே வசிக்கத் தொடங்கிவிட்டன. ஒவ்வொரு கிராமத்திலும் தலா 30க்கும்மேலாக வசித்து வருகின்றன. இவற் றால் பயிர்கள் சேதமடை ந்து விவசாயிகளுக்கு பேரிழப்பு ஏற்படுவது அன் றாட நிகழ்வாகியுள்ளது. இந்நிலையில் குரங்குக்கூட்டத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட திருப்பெயர் கிராமத்தைச்சேர்ந்த விவசாயி தனதுவயலுக்கு சூரியமின்வேலி அமைத்து, பேரிழப்பைத் தடுக்கும் தந்திரத்தைக் கையாண்டுள்ளது பலருக்கும் ஆச்சர்யத்தை ஏற்படுத்தியுள்ளது. பெரம்பலூர் அருகேயுள்ள மேலப்புலியூர் ஊராட்சி, திருப்பெயர் கிராமத்தைச் சேர்ந்த ராமலிங்கம் மகன் நல்லு சாமி (37). இவருக்கு ஊருக்குத் தெற்கே 2ஏக்கர் நிலமுள்ளது. இந்தவயலில் கடந்த 20வருடங்களுக்கும் மேலாக சின்னவெங்காயம் சாகுபடி செய்துவருகிறார். இதில் ஏக்கருக்கு 50முதல் 70மூட்டைவரை வெங்காயத்தை அறுவடை செய்வதுவழக்கம். ஆனால் கடந்த 2012,13ம்ஆண்டு அப்பகுதியில் குரங்குக ளின் அட்டகாசத்தால் 35மூட்டை வெங்காயத்தைக்கூட பெறமுடியாமல் போனது. இதுதொடர்பாக நல்லு சாமி பலமுறை மாவட்ட நிர்வாகத்திடமும், வனத்துறையிட மும் நிவாரணம்கேட்டு மனுசெய்துள்ளார். எந்தப்பலனும் இல்லை. இதனைதொடர்ந்து நடப் பாண்டு வயலைச்சுற்றி சூரியமின்

வேலி அமைத்தார். இதனால் பாதிப்பின்றி மகசூலை முழுமையாகப் பெற்று வருகிறார். இதுதொடர்பாக நல்லுசாமியிடம் கேட்ட போது, கோவையைச்சேர்ந்த நிறுவனத்திடமிருந்து சூரியமின்வேலி அமைத் துள்ளேன். இதற்கான மெட்டீரியலை வாங்கிட ரூ 1.10லட்சமும், அதனைப் பொருத்துவதற்கு ரூ. 40ஆயிரமும் என ரூ.1.50லட்சம்செலவு செய்துள்ளேன். இப்பகுதியில் குரங்குகளின் அட்டகாசமும், காட்டுப் பன்றிகளின் தொல்லையும் அதிகமுள்ளது. இருந்தும் எனதுவயல் இப்போது பாதுகாப்பாக உள்ளது என்றார். ஏற்கனவே சத்திரமனையில் ஒருவிவசாயி சூரியமின்சாரத்தில் வயலுக்கான பம்புசெட் இயக்குவது குறிப்பிடத்தக்கது.

## சம்பா, தாளடி நெற்பயிரில் நெற்பயிரில் பூச்சி, நோயை கட்டுப்படுத்தும் வழிமுறை ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் விளக்கம்

திருவிடைமருதூர், : சம்பா, தாளடி நெற்பயிரில் பூச்சிநோயை கட்டுப்படுத்தும் வழிமுறை குறித்து ஆடுதுறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார். தற்போது நிலைவி வரும் சீதோஷ்ண நிலை பயிர் வளர்ச்சிக்கு ஏதுவாக இருந் தாலும் தொடர்ந்து பெய்து வந்த பருவமழை காரணமாக வயல்களில் தண்ணீர் தேங்கி நிற்கும் நிலை காணப்படுகிறது. இந்த பருவ நிலையால் பூச்சி மற்றும் நோய் தோன்றுவதற்கு அதிக வாய்ப்புள்ளது. குறிப்பாக புகையான் (பழுப்புநிற தத்துப்பூச்சி) இலைச்சுருட்டுப் புழு தாக்குதல் மற்றும் குலைநோய், நெற் பழம் போன்ற நோய்களும் தாக்க வாய்ப்புள்ளது. புகையான் பாதித்த வயல்களில் முதலில் ஆங்காங்கே வட்டவட்ட பரப்புகளாக எரிந்த நிலை போன்று காணப்படும். நாளடைவில் விரிவடைந்து வயல்முழுவதும் பாதிப்பு உண்டாகும். நெற்கதிர் பால்பிடிக்கும் முன்பே பயிர் கரிந்து காய்ந்துவிடும். மேகமூட்டம் சூழ்நிலையில் பாதிப்பு வெகுவாக இருக்கும். பூச்சி தாக்குதலில் தற்போது இலைசுருட்டுப் புழு தாக்குதல் அதிகம் காணப்படுகிறது. முட்டை யில் இருந்து வெளிவரும் இளம்புழு

உமிழநீர்கொண்டு உற்பத்தி பண்ணும் மெல்லிய பட்டுநூல் போன்ற இழைகளால் இலையை சுருட்டி அல்லது இலையின் நுனிப்பகுதியை அடிப்பகுதியுடன் மடக்கி இணைத்து பின்னி அதற்குள் பாதுகாப்பாக இருந்து கொண்டு பச்சையத்தை அறித்து உண்பதால் பயிர் வெண்மை யாக காணப்படும். இதன் காரணமாக மகசூல இழப்பு பெருமளவு பாதிக்ககூடும். புகையானை கட்டுப்படுத்த முதலில் வயலில் தேங்கியுள்ள நீரை வடிக்கட்ட வேண்டும். முடிந்த இடங்களில் நீர் மறைய நீர்பாய்ச்சவும். எட்டு அடிக்கு ஒரு அடி பார் பட்டம் பிரித்து செடிக ளின் அடிபாகத்தில் சூரிய ஒளி படும்படி செய்ய வேண்டும். சிலந்திகள் மற்றும் மிரிட் நாவாய் பூச்சிகள் அதிகம் இருக்கும்போது பூச்சிகொல்லிகள் தெளிப்பதை தவிர்க்கலாம். பூச்சி தாக்குதல் அதிகம் தென்படும்போது ஏக்கருக்கு புப்ரோசைசின் 20 எஸ்.சி 320 மிலி அல்லது தயோமீதாக்சம் 25 டபுள்யு ஜி 40 கிராம், 200 லட்டர் தண்ணீரில் கரைத்து தூர்களில் புகையான் நன்கு நனையும்படி தெளிக்கவும். இலைச் சுருட்டு புழுவின் தாக்குதல் தென்படும்போது இன்டாக்சகார்ப் ஏக்கருக்கு 80மிலி என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து இலைகள் நன்கு நனையும்படி கைதெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். இதேபோல் நெற்பழ நோய் கிருமிகள் காற்றின் மூலமாகவும் விதை மற்றும் நோயுற்ற வைக்கோல் மூலமாகவும் பரவும் தன்மையுடையது. இந்நோயை கட்டுப்படுத்த பூசனகொல்லி மருந்துகளான கார்பென்டாசிம் 200கிராம் அல்லது டிரைசைச்ளசோல் 200கிராம் இவற்றுள் ஏதேனும் ஒன்றை நோய் தென்பட்டவுடன் ஒரு ஏக்கருக்கு தேவையான 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். இவ்வாறு தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்

## <u>தக்காளியிலிருந்து உணவு பதார்த்தம் தயாரிப்பு பயிற்சி</u>

நாகை, : நாகை மாவட்டம் சிக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் தக்காளியிலிருந்து உணவு பதார்த்தங்கள் தயாரிப்பு தொழில்நுட்ப பயிற்சி வருகிற 18ம் தேதி நடக்கிறது. பயிற்சியில் நாகை மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள், பண்ணை மகளிர், கிராமப்புற இளைஞர்கள், தொழில்

முனைவோர் பங்கேற்று பயன்பெறலாம். இந்த பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் வேளாண் அறிவியல் நிலையத்தை நேரடியாகவோ அல்லது 04365 246266 என்ற தொலைபேசி எண்ணையோ தொடர்பு கொண்டு பெயரை பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு சிக்கல் வேளாண் அறிவியல் நிலைய தலைவரும், பேராசிரியருமான ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

## விவசாயிகள் குறை தீர் கூட்டம்

சிவகங்கை, : சிவகங்கையில் விவசாயிகள் குறை தீர் கூட்டம் டிச.26, காலை 11மணிக்கு சிவகங்கை கலெக்டர் அலுவலகத்தில் நடக்கிறது. கலெக்டர் தலைமையில் நடக்கும் இக்கூட்டத்தில் வேளாண், தோட்டக் கலை, மின்வாரியம், குடிநீர் உள்ளிட்ட பல்வேறு துறைகளை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்துகொள்ள உள்ளனர். இதில் மாவட்டம் முழுவதும் உள்ள விவசாயிகள் கலந்து கொண்டு விவசாயம் சார்ந்த குறைகளை தெரிவித்து அதனை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

## 10 ஆண்டுகளுக்கு பின் நிரம்பியது குலசேகரன்பட்டினம் தருவைகுளம்

உடன்குடி, : குலசேகரன்பட்டினம் தருவைகுளம் 10 ஆண்டுகளுக்கு பின் நிரம்பியது. உடன்குடி பகுதியில் பல ஆண்டுகளாக பருவமழை பொய்த்ததால் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வறுமையில் வாடி பிழைப்புக்காக வெளியூர் சென் றனர். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் பருவமழை பெய்தாலும் ஏற்கனவே உட்புகுந்த கடல்நீரின் தன்மை மாறாமலே இருந்து வரு கிறது. இந்நிலையில் வீணாக கடலுக்கு செல்லும் நீரை நீர்பிடிப்பு பகுதிகளில் சேமித்து திருப்பி விட வேண்டுமென பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்த வந்தனர். இந்நிலையில் இந்த ஆண்டு அவ்வப்போது கனமழை பொழிவதும் பின் சாரல் அடிப்பதுமாக இயற்கை சாதகமாக இருந்து வருகிறது. ஏற்கனவே உடன் குடி பகுதியில் உள்ள செம்மறிபுதுக்குளம், சடையநேரி, தாங்கைகுளம் மற்றும் சிறிய சிறிய குளங்கள் நிரம்பியும், நிரம்பி வருகின்றன. சுமார் 10 ஆண்டு

களுக்கும் மேலாக நிரம்பாமல் இருந்த குலசேகரன்பட்டினம் தருவைகுளம் இந்த ஆண்டு நேற்று முன் தினம் காலை முதல் மறு கால் பாய்ந்து கருமேனி ஆற் றில் கலக்கிறது. இதனால் இந்த பகுதி மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை 91 சதவீதம் பெய்துள்ளது வானிலை மையம் தகவல்</u>**

சென்னை, தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை சராசரியாக 91 சதவீதம் பெய்துள்ளதுஎன்றுவானிலைஅதிகாரிதெரிவித்தார்.

**வடகிழக்குபருவமழை**

இந்தியா முழுவதும் தென் மேற்கு பருவமழையின்போது அதிக மழையை தந்தாலும் தமிழ்நாட்டை பொறுத்தவரை வடகிழக்கு பருவமழையின் போதுதான் அதிக அளவு மழை கிடைக்கும். கடந்த வருடம் வடகிழக்கு பருவமழை தமிழ்நாட்டில் பொய்த்தது. ஆனால் இந்த வருடம் வழக்கத்தை விட கூடுதலாக மழை பெய்யும் என்று வானிலை அதிகாரிகள் தெரிவித்து இருந்தனர். இந்த நிலையில் இந்த வருடம் வடகிழக்கு பருவமழை முன்கூட்டியே தொடங்கியது. வடமாவட்டங்களில் போதிய மழை பெய்யவில்லை. ஏரிகள், குளங்கள் நிரம்பவில்லை. ஆனால் கன்னியாகுமரி, நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் இந்த வருடம் பலத்த மழை பெய்துள்ளது. அதனால் அணைகள், ஏரிகள், குளங்கள் நிரம்பி வழிகின்றன. ஆனால் போதிய தடுப்பு அணைகள் கட்டாததால் தாமிர பரணி ஆற்றில் வெள்ளம் ஏற்பட்டு வீணாக கடலில் கலந்து வருகிறது. அதனால் புதிததாக அணைகள் கட்டவேண்டும் அல்லது தடுப்பு அணைகளாவது அதிக அளவில் கட்டவேண்டும் என்றும் விவசாயிகள்,பொதுமக்கள்எதிர்பார்க்கிறார்கள்.

**91சதவீதமழை**

வானிலை அதிகாரிகள் தெரிவிக்கையில், இந்த வடகிழக்கு பருவமழை காலத்தில் தமிழ்நாட்டில் சராசரியாக 44 செ.மீ. மழை பெய்ய வேண்டும். நேற்று வரை 40 செ.மீ. மழை பெய்துள்ளது. இது 91 சதவீதம். இன்றும் (செவ்வாய்க்கிழமை) தமிழ்நாட்டில் சில இடங்களில் மழை பெய்யும் என்றனர்.

**<u>கோபியில் 4 கால்களுடன் பிறந்த அதிசய கோழிக்குஞ்சு</u>**



கோபிசெட்டிபாளையம், கோபிசெட்டிபாளையம் ஜெயராம் பள்ளிக்கூட வீதியை சேர்ந்தவர் பாலு (வயது 45). இவர் வீட்டில் கோழி வளர்த்து வருகிறார். இந்தநிலையில் நேற்று முன்தினம் இரவு கோழி ஒன்று 12 குஞ்சுகளை பொரித்தது. இதில் ஒரு கோழிக்குஞ்சு 4 கால்களுடன் இருந்தது. வழக்கம்போல் 4 விரல்கள் கொண்ட 2 கால்கள் இருந்தன. மேலும் ஒரு காலில் 2 விரல்களும், மற்றொரு காலில் ஒரு விரலும் இருந்தது. மற்ற கோழிக்குஞ்சுகளை போலவே அதுவும் ஆரோக்கியமாக நடந்து செல்கிறது. இந்த அதிசய கோழிக்குஞ்சை அந்த பகுதியை சேர்ந்த பொதுமக்கள் ஆச்சரியத்துடன் பார்த்து சென்றனர்.

**<u>ஊத்தங்கரை அருகே மறுதாம்பூ மாங்காய் விளைச்சல் அமோகம்</u>**



ஊத்தங்கரை அருகே வெள்ளையம்பதி கிராமத்தில் விவசாயி ஒருவரது மாந்தோட்டத்தில் பருவமில்லாத காலத்தில் காய்க்கும் மறுதாம்பூ மாங்காய்கொத்துகொத்தாககாய்த்துள்ளது.

மறுதாம்பூமாங்காய்

பொதுவாக மாங்காய் சீசன் என்பது ஆண்டுதோறும் ஜனவரி மாதம் தொடங்கி ஜூன் மாதம் வரை இருக்கும். இந்த மாதங்களில் தான் மா மரங்கள் பூப்பூத்து, காய்கள் காய்த்து, அறுவடை செய்யப்படும். இதை தவிர்த்து பருவமில்லாத மற்ற மாதங்களில் காய்க்கும் மாங்காய்களுக்கு மறுதாம்பூ மாங்காய் என்று கூறுவார்கள். இவ்வாறு காய்க்கும் மாங்காய்களில் புளிப்புச்சுவை அதிகமாக இருக்கும். இதனால் மறுதாம்பூ மாங்காய்கள் பெரும்பாலும் ஊறுகாய் தயாரிக்க பயன்படுத்தப்படும். ஆனால் இந்த காலங்களில் மாங்காய்களின் விலை, சீசன் காலத்தை விட மூன்று அல்லது நான்கு மடங்கு வரை அதிகமாக இருக்கும். இதனால் போச்சம்பள்ளி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் சில மா விவசாயிகள் பருவமில்லா காலங்களில் மாமரங்களில் காய்கள் காய்க்கும்படி மருந்து மற்றும் உரங்களை பயன்படுத்தி மா விவசாயம் செய்து வருகிறார்கள்.

விளைச்சல்அமோகம்

இதேபோல் ஊத்தங்கரை அருகே உள்ள வெள்ளையம்பதி கிராமத்தை சேர்ந்த விவசாயி கோபி என்பவர் மாந்தோட்டத்தில் மறுதாம்பூ மாங்காய் விளைச்சல் அமோகமாக உள்ளது. இது குறித்து அவர் கூறியதாவது:- 1 ஏக்கர் நிலத்தில் கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு மா செடிகளை நட்டு பராமரித்து வருகிறேன். சீசன் காலங்களை காட்டிலும் மற்ற காலங்களில் மாங்காய்களுக்கு நல்ல விலை கிடைப்பதால் பருவமில்லா காலத்தில் காய்கள் காய்க்கும் படி செந்தூரா மாங்காய் செடிகளில் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு ‘கல்டா‘ என்ற சத்து மருந்தை தலா 15 மில்லி என பிரித்து ஒவ்வொரு செடிக்கும் பயன்படுத்தினேன். மே லும் ஒவ்வொரு செடியைச் சுற்றியும், 3 அடி அகலம் வரை களைகள் வளராமல் பராமரித்து வந்தேன். இதனால் தற்போது பருவமில்லாத மாதத்தில் மாங்காய் மரங் கள் அதிக விளைச்சல் கண்டுள்ளன.

அதிக வருவாய் இந்த மாங்காய்களுக்கு தற்போது கிலோ ரூ.110 வரை விலை கிடைக்கிறது. இதனால் அதிக வருவாய் கிடைக்கிறது. இவ்வாறு பருவமில்லாத காலத்தில் விளைச்சல் ஏற்படும் வகையில் மருந்து

பயன்படுத்துவதால் மாங்காய் மரங்களுக்கு எவ்வித நோய் தாக்குதலும் இல்லை. ஒவ்வொரு செடிக்கும் போதுமான நீர் ஆதாரமும் பராமரிப்பும் இருந்தால் அனைத்து விவசாயிகளுமே இந்த முறையில் நல்ல விளைச்சலைக் காண முடியும். ஒவ்வொரு செடியிலும் தலா 300 முதல் 400 கிலோ வரை மாங்காய்கள் கிடைக்கும். இந்த ஆண்டில் எனது தோட்டத்தில் 15 டன் மாங்காய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன். இவ்வாறு அவர் கூறினார். கோபியின் மாந்தோட்டத்தில் தற்போது மாங்காய்கள் கொத்து கொத்தாக காய்த்துள்ளதை அப்பகுதியைச் சேர்ந்த மற்ற விவசாயிகள் ஆச்சரியத்துடன் பார்த்துச் செல்கிறார்கள்.

## <u>பெரம்பலூர் மாவட்டத்தில் தினசரி 2 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்ய வேண்டும்</u>



ஆய்வு கூட்டத்தில் கலெக்டர் தரேஸ்அஹமது பேசியபோது எடுத்த படம்

பெரம்பலூர் மாவட்டத்தில் தினசரி 2 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்ய வேண்டும் என்று கலெக்டர் தரேஸ் அஹமது பேசினார்.

ஆய்வுக்கூட்டம்

பெரம்பலூர் மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள், பால் உற்பத்தி யாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் உள்ளிட்ட பல்வேறு அமைப்பு களின் செயல் பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் கலெக்டர்.தரேஸ் அஹமது. தலைமையில் நடை பெற்றது. இக்கூட்டத்தில் சங்க செயலாளர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் கலெக்டர் பேசுகையில் தெரிவித்த தாவது:-

மின்ஆளுமைதிட்டம்

பெரம்பலூர் மாவட்டத்தில் பொதுமக்கள், தங்களுக்கு தேவையான சான்றிதழ்களை எளிதில் பெற மாவட்ட மின் ஆளுமை திட்டம் செயல்

படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் பொது மக்கள் சான்றிதழ்களை பெற வருவாய்த்துறை அலுவலகங் களுக்கு நேரில் சென்று சிரமப்படுவதை தவிர்க்கும் வகையில், பொது சேவை மையங்களின் வாயிலாக பொதுமக்களின் மனுக்கள் மற்றும் விபரங்கள் பதி வேற்றம் செய்யப்பட்டு, இணையதளம் மூலமாக சம்பந்தப்பட்ட அலு வலர்களின் பரிசீலனைக்கு உட்படுத்தப்படுகிறது. இதனடிப்படையில் மின்னணு கையொப்பம் இடப்பட்ட சாதிச்சான்று, வருமானச் சான்று, இருப்பிடச் சான்று, முதல் பட்டதாரி சான்று, சிட்டா நகல் உள் ளிட்ட சான்றிதழ்கள், பொது மக்கள் விண்ணப்பம் அளித்த பொது சேவை மையங் களிலேயே வழங்கப்படுகின் றன. இந்த வகையில் கூட்டுறவுத் துறையின் கீழ் 39 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் ஒரு நில வள வங்கியில் செயல்பட்டு வரும் பொது சேவை மையங் களின் மூலமாக இதுவரை 19 ஆயிரத்து 330 சான்றிதழ்கள் வழங்கப்பட்டு பொதுமக்கள்பயனடைந்துள்ளனர்.

2லட்சம்லிட்டர்

பெரம்பலூர் மாவட்டத் தில் தற்போது 167 பால் உற்பத்தி யாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர் களாக உள்ள 65ஆயிரத்து 741 பால் உற்பத்தியாளர் களிடமிருந்து தினசரி 1 லட்சத்து 22 ஆயிரத்து 895 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றது. இதனை 2 லட்சம் லிட்டராக உயர்த்த மாவட் டத்தில் செயல்பட்டு வரும் அனைத்து பால் உற்பத்தி யாளர் சங்க செயலர்களும் தக்க நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித் தார். இக்கூட்டத்தில் கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் சிவ.முத்துகுமார சுவாமி, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கனகசபை, ஆவின் மேலாளர் (திருச்சி) நாகராஜன் உள்பட கால்நடைத்துறை, கூட்டு றவுத் துறை, வேளாண்மைத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**<u>உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 160 பயனாளிகளுக்கு ரூ.5½ லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள்</u>**



சாத்தூரில் நடைபெற்ற விழாவில், உழவர் பாது காப்புத் திட்டத்தின் கீழ் 160 பயனாளிகளுக்கு ரூ.5½ லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை அமைச்சர்கள்வழங்கினார்கள்.

நலத்திட்டஉதவிகள்

விருதுநகர் மாவட்டம், சாத்தூரில், வருவாய் துறை சார்பில் முதல்-அமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட் டத்தின் கீழ் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. கலெக்டர் ஹரி ஹரன் தலைமை தாங்கி னார். வருவாய்த்துறை அ¬ மச்சர் ஆர்.பி.உதயகுமார் மற்றும் செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக் கத்துறை அமைச்சர் கே.டி. ராஜேந்திரபாலாஜி ஆகியோர் சிறப்பு விருந் தினர்களாக கலந்து கொ ண்டனர். விழாவில், கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, இறப்பு மற்றும் ஈமக்கிரியை உத வித்தொகை உள்பட பல் வேறுஉதவித் தொகை கள் வழங்க பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டனர். இதன் மூலம், 160 பயனாளிகளுக்கு ரூ.5 லட்சத்து 42 ஆயிரத்து 700 மதிப்பில் நலத்திட்ட உதவிகளை அமைச்சர்கள் வழங்கினார்கள். காத்திருக்க வேண்டும். விழாவில், அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் பேசும் போதுதெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் நலத் திட்ட உதவிகளை பெற வே ண்டும் என்றால் மக்கள் வெகு காலம் காத்திருக்க வேண்டும். காத்திருப்பதோடு மட்டும் அல்லாமல் அரசு அலுவலகங்களில் அலைந்து திரிய வேண்டிய நிலை இருந்தது. ஆனால், தற்போது உள்ள தமிழக அரசு மக்களைத்தேடி சென்று நலத்திட்ட உதவிகளை வழ ங்கி கொண்டிருக்கிறது. மக் களுக்காக என்னென்ன பணி களை செய்ய வேண் டுமோ, அனைத்து

உதவி களையும் மக்களின் இருப் பிடங்களுக்கே கொண்டு சேர்க்கிறது. இத்தகைய மக்களுக்காக உழைக்கக்கூடிய சிந்தனையும் செயலாற்றலும் கொண்ட தலைமையின் கீழ் தமிழக அரசு சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

உதவித்தொகை

கல்வி, உழவர் பாது காப்புத் திட்டம் போன்ற எண்ணற்ற உதவித் தொகைகளை தினந் தோறும் மக்களுக்காக வழங்கி வருகிறது. சிறு குறுவிவ சாயிகள் மற்றும் அவர் களின் வாரிசுதாரர் கள் என 1 கோடியே 63 லட்சம் விவசாய குடும்பங் களுக்கு சமூக பொருளாதாரத்தை உயர்த்தும் வகையில், நலத் திட்ட உதவிகள் வழங்கப் பட்டுள்ளது. விவசாயிகளுக்கு ஆயிரம் ரூபாய் ஓய்வூதியமாக வழங்கி இந்தியாவிற்கே தமிழ கம் முன்மாதிரியாக திகழ் கிறது.சுமார் 4.7 லட்சம் மக்க ளுக்கு பட்டா உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளது. இவ் வாறு அவர் பேசினார்.

பொருளாதாரம்

தொடர்ந்து அமைச்சர் கே.டி.ராஜேந்திரபாலாஜி பேசியதாவது:- ஏழை எளிய மக்களின் பொருளாதாரத்தை முன்னேற்றும் வகையிலே அனைத்து திட்டங்களும் செயல்படுத்தப்படுவதால் மக்களின் ஏகோபத் திய ஆதர வைப் பெற்ற அரசாக தமிழக அரசு திகழ்கிறது. அனைத்து தரப்பு மக்க ளும் ஒரே நாளில் தங்களுக்கு தேவையான சலு கைகளை அவர்களுடைய இருப்பிடங்களிலே பெற வேண்டும் என்பதற்காக வேறு எந்த மாநிலத்திலும் செயல்படுத்தாத அம்மா திட்டம் தமிழகத்தில் செயல் படுத்தப்படுகிறது.கிராமங் களில் உள்ள தாய்மார்களின் தேவைகளை கருத்தில் கொண்டு விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின் விசிறி வழங்கும் திட்டம், மகப்பேறு உதவித்தொகை வழங்கும் திட்டம், மருத்துவ சேவைகளை விரிவுபடுத்துதல் போன்ற திட்டங்கள் சிறப்பாக செயல் படுத்தப்படுகிறது. குக்கிராமங்களில் உள்ள வர்களுக்கும் பிறந்த குழந்தை களுக்கும் அவர்கள் வளரும் வரை வாழ வழி வகை செய் யும் வகையில் பல்வேறு நலத் திட்ட உதவிகள் செய்யப்பட்டு வருகிறது.

ஒற்றுமை

மேலும் சாதி, சமய வேறுபாடுகள் அற்ற சமு தாயத்தை உருவாக்கும் வகையில் அனைவரிடமும் ஒற்றுமையை உருவாக்கி ஒரு நல்லாட்சியை வழங்கி வருகிறது. மக்களின் துயரங் களை தீர்க்கும் வகையில் முதியோர் உதவித்தொகை ரூ.1000-ஆக உயர்த்தி சுமார் 35 லட்சம் மக்களுக்கு வழ ங்கி வருகிறது. தமிழக அர சின் மூலம் சாதாரணமாக ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் இன்று 2 கோடிக்கு மே லான உறுப்பினர்களுடன் எண்ணற்ற பயன்களுடன் பெரிய அளவில் செயல்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் பேசினார்.விழாவில், வருவாய் அலுவலர் முனு சாமி, சிவகாசி உதவி கலெக் டர் அமர்குஷ்வாஹா, சாத்தூர் நகராட்சி த¬ லவர் டெய்சிராணி வா சன், சாத்தூர் ஒன்றிய குழுத்தலைவர் வேலாயுதம், மாவட்ட ஊராட்சி உறுப் பினர் சண்முககனி, பால முருகன், தனித்துணை ஆட் சியர் வசந்தராஜன் உள்பட வட்டாட்சியர், அரசு அலு வலர்கள், உள்ளாட்சி அ¬ மப்புகளின் பிரதிநிதிகள் பயனாளிகள் பலர் கலந்து கொண்டனர்.